DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM
Present : Thiru. C.Rajasekar, B.A, B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No.3/2020**

**CNR.No: TNTH06-000015 -2020 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : முத்து (எ) முத்துகிருஷ்ணன் | Town | சின்னமனூர் |
| Father's Name | : வெங்கட்ராமன் | Occupation | : |
| Age | : | **PW1** | |

---

நாள் :27.01.2025

**1, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1) நான் என்ன படித்துள்ளேன், என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன், டிராவல் ஏஜென்ஸி நடத்தி வருகிறேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள எனக்கு மதுரை முகவரியில் நான் எப்போது முதல் வசித்து வருகிறேன் என்றால் 2008ம் ஆண்டு முதல் வசித்து வருகிறேன். அந்த முகவரிக்கான வீடு சொந்த வீடா என்றால் இல்லை, எனது மாமனார் வீடாகும். இந்த வழக்கில் 1, 3 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை விபரங்களை படித்து தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். மேற்படி, எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள எனது தாத்தா சுப்பிரமணியின் வாரிசு வழிக்கான கொடிவழி ஜாபிதா விபரங்களை நான் படித்து தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

2) எனது தாத்தா சுப்பிரமணியனுக்கு கும்பேஸ்வரன், வெங்கடேஸ்வரன் என்ற வெங்கட்ராமன், கிருஷ்ணமூர்த்தி, ராமச்சந்திரன், ராசாத்தி, சரஸ்வதி ஆகிய 6 பேர் பிள்ளைகள் என்றால் சரிதான். அதில் கும்பேஸ்வரன் முன்பே இறந்து விட்டார் என்றால் சரிதான். கும்பேஸ்வரன் இறந்தபிறகு சுப்பிரமணியின் வாரிசுகள் தங்களுக்குள் 13.02.1964 அன்று பாகப்பிரிவினை செய்து கொண்டு ஒரு பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக்கொண்டனர் என்றால் சரிதான். மேற்படி

13.02.1964 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின்படி சி செட்டியூல் சொத்தாக வழக்கு சொத்தானது ராமச்சந்திரனுக்கு பாகமாக கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். மேற்படி, 13.02.1964 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் எங்கள் தரப்பில் வாசாஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்து மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 2885 சதுரடிகள் பரப்பளவு கொண்டதாகும், 17-1/2 அடி அகலமும், 165 அடி நீளமும் கொண்டதாகும்.

3) வழக்கு சொத்தில் கட்டப்பட்டுள்ள வீட்டின் வயது என்ன இருக்கும் என்றால் சுமார் 65 வருடங்கள் இருக்கும். நான் வழக்கு சொத்தில் கட்டுப்பட்ட மொத்த விஸ்தீரணத்திற்காகவும் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்தின் உரிமையளரான 03.02.2011 அன்று எந்த ஒரு விருப்புறுதி ஆவணம் எதுவும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபர் இறந்துவிட்டால் அவரது வாரிசுகள் அனைவருக்கும் அவரது சொத்தில் பாகம் உரிமை உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் கிருஷ்ணமூர்த்தி மட்டுமே அவருக்குரிய பாகஉரிமையை எனது தந்தை பெயருக்கு விட்டுக்கொடுத்து பாக விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த விடுதலை ஆவணமானது வாசாஆ 2 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) கிருஷ்ணமூர்த்தி அவருக்குரிய பாக உரிமை பங்கைப்பொறுத்து மட்டும் தான் வேறு நபர்களுக்கு விடுதலை ஆவணம் எழுதிக்கொடுக்க உரிமை உள்ளது என்றாலும், வேறு நபர்களுக்குரிய உரிமையைப்பொறுத்து கிருஷ்ணமூர்த்தி விடுதலை ஆவணம் எழுதிக்கொடுக்க உரிமை இல்லை என்றாலும் சரிதான். கிருஷ்ணமூர்த்தி விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்த பிறகு சரஸ்வதி, ராசாத்தி மற்றும் கும்பேஸ்வரனின் வாரிசுகளிடம் விடுதலை ஆவணம் ஏதாவது என் தந்தை எழுதி வாங்கினாரா என்றால் 2011 ம் ஆண்டு முதல் வழக்கு சொத்தினைப்பொறுத்து ரஸ்வதி, ராசாத்தி மற்றும் கும்பேஸ்வரனின் வாரிசுகள் யாரும் ஆட்சேபிக்கவும் இல்லை, அவர்கள் யாரும் இந்த வழக்கில் தரப்பினர்களும் இல்லை.

5) உரிய நபர்களிடமிருந்து என் தந்தை உரிய முறையில் வழக்கு சொத்தை அடையாத காரணத்தினால் வழக்கு சொத்தினை என் பெயருக்கு எழுதிக்கொடுக்க என் தந்தைக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. 09.05.2019 ம் தேதியில் எனது தந்தை என் பெயருக்கு வாசாஆ 3 தானப்பத்திரத்தை ஏற்படுத்தி பதிந்து கொடுத்தார் என்றால் சரிதான். வாசாஆ 3 ஆவணத்திற்கான அசலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், வேண்டுமென்றால் தாக்கல் செய்கிறேன். அந்த தான ஆவணத்தின் அசலை ஏன் தாக்கல் செய்யவில்லை என்று வழக்குரையில் சொல்லவில்லை என்றால் ஆமாம், வேண்டுமென்றால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

6) என் தந்தை வழக்கு சொத்தை முழுவதுமாக என் பெயரில் தான ஆவணம் ஏற்படுத்திக்கொடுக்க உரிமையற்றவர் என்றால் சரியல்ல. என் முன் காட்டப்படும் வாசாஆ 5 ஆவணமானது என் தந்தையால் சின்னமனூர் காவல்நிலையத்தில் அளிக்கப்பட்ட புகாருக்கான புகார் மனு ஏற்பு ரசீது என்றால் சரிதான். வாசாஆ 5 ஆவணத்தில் புகார் அளித்த தேதியாக 20.10.2019 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 5 புகார் மனு ரசீதுக்குரிய புகார் மனுவை அளித்தபோது நான் எங்கிருந்தேன் என்றால் நானும், என் தந்தையுடன் காவல்நிலையம் வந்திருந்தேன். வாசாஆ 5 புகார் மனு ரசீதுக்குரிய புகார் மனுவின் நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு சரியாக நினைவில் இல்லை.

7) வாசாஆ 5 புகார் மனுக்குரிய சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்றால் 19.10.2019 அன்று இரவு நடந்தது, மறுநாள் காலையில் புகார் அளித்தோம். 1 முதல் 3 பிரதிவாதிகள் என் தந்தைக்கு கடந்த 14.12.2019 அன்று ஒரு சட்ட அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை. சாட்சியிடம் வாசாஆ 6 சட்ட அறிவிப்பினை காண்பித்து மீண்டும் வினாவியபோது, தனக்கு சரியாக நினைவில் இல்லை என்றும், இந்த சட்ட அறிவிப்பிற்கு தான் பதில் அறிவிப்பு அனுப்பியிருப்பதாகவும் சாட்சியம் அளிக்கிறார். மேற்படி சட்ட அறிவிப்பிற்கு பிறகு

எனது தந்தை 23.12.2019 அன்று பிரதிவாதிகள் இடையூறு செய்ததாக குறிப்பிட்டு, 26.12.2019 அன்று சின்னமனூர் காவல்நிலையத்தில் மீண்டும் ஒரு புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி 26.12.2019 ம் தேதியிட்ட புகார் மனு நகலானது வாசாஆ 8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8) நான் கூறுவது போல சம்பவம் எதுவும் நடைபெறவே இல்லை என்றாலும், நான் வழக்கிற்காக வேண்டி மேற்படி ஆணங்களை உற்பத்தி செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் அத்துமீறி நுழையவில்லை என்றாலும், அவர்கள் வழக்கு சொத்தின் கூட்டு உரிமையாளர்கள் என்றாலும் சரியல்ல. இந்த அசல் வழக்கானது 09.06.2023 அன்று எனது வருகையின்மையின் காரணமாக தள்ளுபடியானது என்றால் சரிதான். அதன் பிறகு 15.06.2023 அன்று நான் மணிமாறன் என்பவருக்கு வழக்கு சொத்தில் ஒரு பகுதி சொத்தினை கிரையம் கொடுத்துள்ளேன் என்றாலும் அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் தற்போது என் முன் காட்டப்பட்டும் ஆவணம் என்றால் சரிதான். ( **மேற்படி 15.06.2023 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் இணையபதிவிறக்க சான்றிட்ட நகல் பிவாசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) ( வாதி தரப்பில் மேற்படி ஆவணமானது வழக்கிற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் எனக்கூறி ஆட்சேபனை செய்யப்பட்டது. ஆட்சேபனை குறித்து வழக்கின் இறுதியில் தீர்மானம் எட்டப்படும் என தீர்மானித்து மேற்படி ஆவணம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

9) நான் மணிமாறன் பெயருக்கு ஏற்படுத்திக்கொடுத்துள்ள பிவாசாஆ 1 ஆவணத்தினை சொல்லாது என விளம்புகை கோரி 1,3 பிரதிவாதிகள் இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 171/2023 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் பல உண்மைகளை மறைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதனால் எனது வழக்கு தள்ளுபடி

செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிவுற்றது)**

(ஓ.ம்) C. ராஜசேகர், B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.